# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.59/2024

2026 –ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 20.01.2026</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.எமிலிமேரி (PW–1 ) | வயது | : | 37/2025 |
| க/த பெயர் | : | திரு. சுமன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | தலையாமங்கலம் | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தை பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளதால் அந்த இடம் வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே எண்ணில், எவ்வளவு விஸ்தீரணத்திற்கு, எந்த நான்கெல்லையில் ஆக்கிரமித்துள்ளார் என்றால் தலையாமங்கலம் சர்வே எண்.200/1, விஸ்தீரணம் 20 குழி, நான்கெல்லை என்னுடைய இடத்திற்கு தெற்கு, செல்லியம்மன் கோவில் செல்லும் பாதைக்கு கிழக்கு, வாய்வாய்க்காலுக்கு மேற்கு, செல்லியம்மன் கோவிலுக்கு வடக்கு.
2) மேற்கண்ட விபரங்களை சொல்லிதான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். எந்த தேதியில் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமித்தார் என்றால் தேதி தெரியாது, 2019 இல் ஆக்கிரமித்தார். நான் தாவா சொத்தை எப்போது கிரயம் வாங்கினேன் என்றால் 2021 இல் கிரயம் வாங்கினேன். 2021 க்கு முன்பு தாவா சொத்திற்கும் எனக்கும் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை லோகநாதன் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கும்போது சர்வேயரை வைத்து அளந்து கிரயம் வாங்கினேனா என்றால் இல்லை.
3) நான் தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பே பிரதிவாதி ஆக்கிரமிப்பில் இருந்தார் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கும்போதே பிரதிவாதி ஆக்கிரமித்த 20 குழியையும் சேர்த்து கிரயம் வாங்கினேனா என்றால் ஆமாம். மேற்கண்ட விபரத்தை கிரய பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, லோகநாதன் கிரயம் வாங்கும்போது சொல்லப்பட்ட விபரத்தை தான் என்னுடைய கிரயத்திலும் எழுதப்பட்டது.

4) எனது கிரய ஆவணத்தின்படி தாவா சொத்தில் 61 குழியும் என்னிடம் ஒப்படைத்ததாக சொல்லப்பட்டுள்ள விபரம் பொய்யானது என்றால் சரியல்ல. என்னிடம் கொடுக்கப்பட்ட கிரய ஆவணத்தில் அனுபவம் கொடுக்காமல் அனுபவம் கொடுத்ததாக சொல்லி எழுதப்பட்ட கிரய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென்புறம் உள்ள இதே சர்வே எண்ணில் 0.08.5 ஏர்ஸ் இடத்தை பிரதிவாதி ஈஸ்வரி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான்.
5) பிரதிவாதி கிரயம் வாங்கிய சமயத்தில் நான் வாங்கிய சொத்து யார் வசம் இருந்தது என்றால் ராசிகா என்பவரிடம் இருந்தது. தாவா சொத்து ஏற்கனவே பிரேமா என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றால் ராசிகாவிற்கு முன்பு பிரேமாவிற்கு சொந்தமான சொத்து. ராசிகாவிடமிருந்து தான் லோகநாதன் தாவா சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். ராசிகா கிரயம் வாங்கி சமயத்தில் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமித்து வைத்திருந்தாரா என்றால் இல்ல. பிரதிவாதி லோகநாதன் மீது அசல் வழக்கு எண்.28/2021 வழக்கு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.
6) அசல் வழக்கு எண்.28/2021 வழக்கு சொத்தானது பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். நான் வாங்கிய சொத்திற்கும் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கும் இடையில் உயிர் வேலி உள்ளது என்றால் இல்லை. நான் வாங்கிய சொத்திற்கும் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கும் இடையில் உயிர் வேலி உள்ளது என்றும், தற்போது வழக்கிற்காக உயிர் வேலி இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனது சொத்திற்கும் பிரதிவாதி சொத்திற்கும் இடையில் வேலி உள்ளது ஆனால் இரண்டு சொத்தையும் பிரித்து காண்பிக்கும் விதமாக இல்லை.
7) ராசிகா, லோகநாதன் ஆகியோர் தாவா சொத்தை கிரயம் வாங்கும்போதே இரண்டு சொத்தையும் பிரித்து காண்பிக்கும் விதமாக உயிர் வேலி இருந்தது என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்தில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்கிய சொத்து இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.28/2021 நிலுவையில் இருக்கும்போது வாங்கப்பட்டது என்றால் சரிதான், நான் கிரயம் வாங்கும்போது வழக்கு நிலுவையில் இருக்கும் விபரம் எனக்கு தெரியாது.
8) லோகநாதன் எனது உறவினர் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.28/2021 வழக்கின் சொத்தை நான் கிரயம் வாங்கியதால் அந்த வழக்கில் நான் அவசிய தரப்பினர் என்று சொல்லி என்னையும் ஒரு தரப்பினராக சேரக்க வேண்டும் என லோகநாதன் மனு கொடுத்து IA.No.462/2023 அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. லோகநாதன் வழக்கு நடத்தும்போது நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.28/2021

வழக்கின் விபரம் எனக்கு முழுமையாக தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9) தாவா சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்து வைத்துள்ளார் என்பதை காண்பிக்கும் ஆவணம் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் வடக்கு புறம் பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்சித்து வருகிறார் என எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியானவர் தாவா சொத்தின் தென்புறம் இருக்கும்போது எவ்வாறு வடபுறம் ஆக்கிரமித்து வருகிறார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதி இடையூறு செய்வதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டும் என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எனது வாக்குமூலத்திற்கும் முரண்பாடு இருப்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியானவர் லோகநாதன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதியை தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நானும் லோகநாதனும் கூட்டு சேர்ந்து பொய்யான வழக்குமூலத்தை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையில் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், Luxury க்காக தாக்கல் செய்யப்பட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.06 16:09:46 +0530

District Munsif
Mannargudi.